நாள் -22.09.2023

**C.C. No**.28/2021

**எ.ம.சா.1-ரவி, த/பெ.பொன்னுசாமி.**

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 22nd **day of September** 2023.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

1. நான் வேலன் இன்போஸ் சர்வீசஸ் என்ற பெயரில் மென்பொருள் நிறுவனம் நடத்தி வருகிறேன். எனக்கு காசோலைகள் பரிவர்த்தனைகள் மற்றும் வசூலுக்கு தாக்கல் செய்யும் முறைகள் குறித்து தெரியும் என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.3 வங்கி கணக்கு பட்டியலில் 19.11.2020ம் தேதியன்று இருப்பு தொகை ரூ.11,696.45/- குறிப்பிடபட்டுள்ளது. எனவே 18ம் தேதியன்றும் இருப்பு தொகை ரூ.11,696.45/- தான் இருந்திருக்கும் என்றால் சரிதான்.

2. வழக்கு காசோலை 17.11.2020ம் தேதியன்று வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. பொதுவாக காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யும்பொழுது அன்றைய தினத்திற்கு முந்தைய தினத்தில் வங்கி கணக்கில் உள்ள தொகையை கணக்கிட்டு தான் காசோலையை அனுமதிப்பதும் அல்லது திருபபப்படுவதும் வழக்கம் என்றால் சரியல்ல. வசூலுக்கு தாக்கல் செய்யும் தினத்தன்று வங்கி கணக்கில் போதிய தொகை இருப்பு இருக்கும் பட்சத்தில் காசோலை தொகை வசூலாகிவிடும்.

3. எ.ம.சா.ஆ.3 வங்கி கணக்கு பட்டியலில் 19.11.2020ம் தேதியன்று தான் காசோலையை நிறுத்தி வைத்ததற்கான தொகை பிடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு காசோலையை நிறுத்தி வைத்தபொழுதும் வங்கியின் இருப்பு ரூ.11,696.45/- என்றால் சரிதான். என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மருத்துவ ரசீது என்னுடைய மாமனாருக்குரியதாகும். கிரிடிட் கார்டுக்குரிய பட்டியல் என்னுடையதாகும்.

4. பாஸ்வேடு தெரிந்தால் கிரிடிட் கார்டை யார் வேண்டும் என்றாலும் பயன்படுத்தலாம் என்றால் சரிதான். 04.09.2020ம் தேதியன்று நான் கிரிடிட் கார்டை பயன்படுத்தினேன் என்றும் அதனால் வாதியை சந்திக்கவில்லை என்று கூறுவதும் பொய் என்றாலும் மேலும் என்னுடைய கிரிடிட் கார்டை நான் பயன்படுத்த வில்லை என்றால் சரியல்ல. 04.09.2020ம் தேதியன்று மனுதாரரிடம் நான் ரூ.10 லட்சம் கடனாக பெற்றேன் என்றால் சரியல்ல.

5. அக்கடனை தீர்ப்பதற்கான நான் வழக்கு காசோலையை மனுதாரருக்கு கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் கூறியதன் பெயரில் தான் மனுதாரர் வழக்கு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. நான் காசோலையை மனுதாரர் வசம் கொடுக்கவே இல்லை. அதனால் வசூலுக்கு தாக்கல் செய்ய கூறியிருக்க வாய்ப்பில்லை. வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் நான் அக்கையொப்பத்தினை 10 வருடங்களுக்கு முன்னர் போட்டது போல் உள்ளது.

6. கையொப்பம் மாறியிருப்பதாக கூறி வங்கியிலிருந்து தகவல் வந்ததால் வங்கிக்கு சென்று என்னுடைய தற்போதைய கையொப்பத்தினை செய்து கொடுத்துள்ளேன். எந்த தேதி என்று ஞாபகம் இல்லை. எந்த தேதியில் கொடுத்தேன் என்று அதை வங்கியிலிந்து பெற்று தாக்கல் செய்ய இயலும் என்றால் சரிதான். வழக்கு காசோலை காணாமல் போனது குறித்து அறிவிப்பு ஏதாவது கொடுத்துள்ளீர்களா என்றால் அக்காசோலை காணாமல் போன விபரம் எனக்கு 19.10.2020ம் தேதியன்று தான் தெரியவந்தது. காசோலை வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக வங்கியிலிருந்து குறுந்தகவல் வந்ததன் அடிப்படையில் தான் எனக்கு காசோலையை காணாமல் போனது தெரியவந்தது. அதனால் நான் காசோலையை நிறுத்தி வைக்குமாறு கூறினேன்.

7. இணையதளத்தின் வழியாக நிறுத்தி வைக்குமாறு வேண்டுகோள் கொடுத்தேன். அதற்குரிய ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காசோலை காணாமல் போகவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக காணாமல் போனதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 04.09.2020 முதல் 10 நாட்கள் என்னுடைய மாமனாரின் சிகிச்சைக்காக அவருடன் மருத்துவமனையில் இருந்தேன் என்று வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. 17.11.2020ம் தேதியன்று வழக்கு காசோலையானது வசூலுக்கு வந்தது என்றாலும் அன்றைய தினம் என்னுடைய வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்றால் சரிதான். காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யப்படும் என்று தெரியாது. அதனால் நான் பணம் இருப்பு வைக்கவில்லை. குடும்ப செலவு மற்றும் வியாபார பண தேவை இருந்ததால் தான் நான் மனுதாரரிடம் கடன் பெற்றேன் என்றால் சரியல்ல.

9. தொழில் தேவைக்காக எனக்கு 1 கோடி ரூபாய் வரை வங்கி கணக்கில் பணம் இருப்பு இருந்தது. அதை நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

G RUBANA

Digitally signed by G RUBANA
Date: 2023.09.22 17:25:39 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்.**